திரு. வை. பாலசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாளில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதனுடைய ஞாபகார்த்தமாக, நம்முடைய முதலமைச்சர் படத்தை சைக்கிள் ரிக்ஷாவில் ஒட்டினால் காழ்ப்புணர்ச்சியோடு சில கூட்டம் அழிக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கை ரிக்ஷாவுக்குப் பதிலாக, சைக்கிள் ரிக்ஷா வழங்கியதற்கு நன்றி பாராட்டுகின்ற வகையில் தொழிலாளிகள் அத்தகைய படங்களை வைத்துக் கொள்வார்களானால் நல்லதுதான் என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில், காழ்ப்புணர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்து இருந்து வருகிற ஒரு புற்று நோய்.

திரு. சித. சிதம்பரம் : தலைவரவர்களே, கை ரிக்ஷாவை ஒழித்துவிட்டு சைக்கிள் ரிக்ஷாவை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்தியதைப் போல், பார வண்டிகளை இழுப்பவர்களுக்குச் சௌகரியம் செய்ய அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, படிப்படியாக மேற்கொள்ளவேண்டிய பணிகள்.

திண்டிவனம்—நெசல் பேருந்துப் பணி.

*471 வினா—திரு. ந. முத்துவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) திண்டிவனத்திலிருந்து நெசல் கிராமத்திற்கு அரசுப் போக்குவரத்து பேருந்து விடுவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் பேருந்து விடப்படும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. முத்துவேல் : தலைவரவர்களே, திண்டிவனத்திலிருந்து நெசல் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமானால், நெசல் கிராமத்தைச் சுற்றிச் செல்ல வேண்டும்—8 கிராமங்களிருக்கின்றன. அவர்கள் 8 மைல் தூரம் சென்றுதான் பஸ் ஏற வேண்டியிருக்கிறது. ஆகவே, தற்போழுது ஏற்படுத்தியுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலிருந்தாவது பஸ் விட உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த ஊருக்குச் செல்வதற்கு பஸ்ஸை விடுவதற்கு ஏற்ற பாதை வசதி அமையவில்லை. ஆகவே, செய்ய இயலவில்லையென்று என்னிடத்திலே குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.